1238

123 215336 251

ARYA DHARMAM REGD. No. M. 2913

TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.

[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணு

மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 21
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு–25 | கும்பகோணம் விக்கிரம-வரு வைகாசி-மீ 24வ 1940-வரு ஜூன்மீ 6வ | லம–23

28 JUN 1940

வாரக் குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ. வே. ஸோ. சர்மா

நல்லுபதேசமே !! ஸ்ரீமான் ஸி. பி. ராமஸ்வாமி அய்யரவர்கள் பிரிட்டனுடன் இப்போது நாம் ஸ்வராஜ்யபேரம் செய்யக்கூடாது. ஹிட்லரின் ஸாஹஸம் உலகைக் கெடுக்கும். பூர்ண உதவியை நாம் செய்ய வேண்டு மென்றார்! ஓர் வகையிலிதை நாம் பூர்ணமாக ஆதரிக்கிறோம்.

ஆனல் கடமை என்ன ! யுத்தம் முடிந்த நாம் இந்தியா அபேக்ஷிக்கும் சுயராஜ்யத்தை ஸகல கக்ஷிகளும் மதத்தினரும் ஏற்கும் வண்ணம் தருவதாக சொல்வதில் என்ன ஆக்ஷேபம்? ஏன் தாமதிக்க வேண்டும்? தேச ஸபையும் தர்மத்தை விடக்கூடாது.

டில்லியில் யாகமாம்! நமது அரசர் வெற்றி பெறுமாறு பல ஸாதுக்கள் ஒன்று கூடி பல நாட்களில் செய்யத்தக்க ஓர் வேள்வி செய்கின்றனர். ஆனல் அதன் பெயர் யாது? எந்த விதியைத் தழுவியதென்பதை நிரூபர் அறிவிக்க முடியவில்லை! பாவம்.

தர்ம விருத்திக்காக ஸப்தாகம்! அருணசல க்ஷேத்திரத்தில் அரசனது வெற்றிக்காகவும் தேசீய ஸபையைப் பிடித்தாட்டும் அதர்மப் பேய் அகலவும் தர்மம் தழைத்து தேசம் நன்மை பெறவும் வக்கீல் ஸ்ரீமான் டி. ஆர். வெங்கட்ராமய்யர் இத்தகைய ஸங்கல்பத்துடன் ஓர் ஸப்தாஹ யக்ஞத்தை நடத்தி வைத்தார்.

முன் ஜாக்கிரதை வேண்டும்! திண்டிவனத்தருகே புயல் காற்றால் ரயில் வண்டி விழ்ந்து பலர் இறந்தனர். காலத்தில் அந்தந்த ஸ்டேஷனுக்குச் செல்லவேண்டுமென்ற சட்டத்தை கண் மூடியாய் பின்பற்றாது பேராபத்தை விளைவிக்கும் பெரும் புயல் அடிக்கும்போது வண்டியை நிறுத்தி ஜன்னல்களைத் திறந்து வைத்திருந்தால் இத்தகைய ஆபத்து வந்திராதென பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

விழுப்புரத்தில் மத உணர்ச்சி! தெய்வ நெறிக் கழகத்தார் செயலால் பற்பல மத உபன்யாஸங்கள் நடைபெறுகின்றன. பொதுமக்களும் மத உபன்யாஸமெனில் எப்போது எப்போதென ஆவலுடன் கேட்கின்றனர். 3வ முதல் ஸ்ரீ பகவத்கீதை உபன்யாஸம் நடைபெறுகிறது. ஆயிரக் கணக்கான அன்பர்கள் ச்ரவணம் செய்கின்றனர்.

வேதபாடசாலை! ஷடி ஊரில் ஷடி ஸபையினுதவில் ஓர் வேதபாடசாலை நடக்கிறது. 5 மாணவர்கள் வீட்டிற்கோர் நாள் முறையாக அன்னமுண்டு வேதாத்யயனம் செய்கின்றனர். இங்ஙனம் ஒவ்வோர் ஊரும் மத உபன்யாஸத்தையும் வேத வகுப்பையும் ஆரம்பித்தால் நாட்டிற்கு க்ஷேமமுண்டாகும்

ஆர்யதர்மாபிவிர்த்தினீ பிராம்மண மஹாஸபை திருக்கோவிலூர்

ஸ்ரீ ஸ்காந்தபுராண பிரவசனம்

விக்ரமவரு சித்திரைமீ 31வ ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ ஸ்காந்த புராண பிரவசனம், ஸ்ரீவள்ளி தேவயானிகா விவாஹ மஹோற்சவத்தோடு, வைகாசிமீ 11வ வெள்ளிக்கிழமையன்று முடிவடைந்தது. பட்டாபிஷேகத்தன்று ஸ்ரீ சுப்ரமணிய ஸ்வாமி படத்திற்கு பஞ்சோபசார பூஜை நடத்தி, படத்தை மேளவாத்தியங்களுடனும், வேத கோஷத்துடனும், ஸ்ரீ பிரஹன்னாயிகிகா ஸமேத ஸ்ரீ வீராட்டஹாஸேஸ்வரஸ்வாமி கோவில் மாடவீதிகளில், அக்கிரஹார வாலிபர்கள் ஊர்வலமாக எடுத்துச் சென்றார்கள் மங்களஹாரத்திக்கு பிறகு கூடியிருந்த ஆஸ்திகர்களனைவருக்கும் சந்தன, தாம்பூலம், மற்றும் இதர பிரசாதங்களும் வழங்கப்பட்டன.

புராணிகரான சென்னை பிரமஸ்ரீ ஸோமதேவசர்மா அவர்களுக்கு மஹாஜனங்களுடைய சம்பாவனையளித்து, உள்ளூர் வக்கீல் ஸ்ரீ ஸி. வி. நாராயணஸ்வாமிய்யரவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டது.

ஸ்ரீசர்மா அவர்களுடையதர்மோபதேசத்தில் ஏற்பட்ட ஊக்கத்தினுல் அக்கிரஹார வாலிபர்கள் பட்டாபிஷேகத்தன்று சிறப்பாக நடத்திய வைபவங்கள் எல்லோராலும் மிகவும் போற்றப்பட்டது.

ஸ்வயமாகவே ஸ்கந்தனிடத்தில் ஆழ்ந்த பக்தியுள்ள, கோவல்வீரட்டானம் கீழூர் ஆதீனம் திருப்பாபுலியூர் ஸ்ரீ ஞானியார்ஸ்வாமிகளவர்கள் ஸ்ரீஸ்காந்தபுராண பிரவசனத்தில், பலநாள் கலந்துகொண்டு முடிவில் தமது இனிய செந்தமிழ் சொற்களால் ஸ்ரீ ஸ்காந்த புராண அருமை பெருமைகளைக் கூறி புராணிகரான ஸ்ரீ சர்மா அவர்களையும் போற்றிப்பேசிய முடிவுரையும் அங்குகுறிப்பிடத்தக்கது. பட்டாபிஷேகம் இனிது நடந்தேறியது. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்

அருணையில் ஸப்தாஹயக்ஞம்.

திருவண்ணமலை வக்கீல்களும் உத்யோகஸ்தர்களும் வேண்ட ஸ்ரீமான ஸோமதேவ சர்மாஅவர்கள் 27தேதி காலை விதிப்படி தீக்ஷை செய்து அன்னஸத்ரத்திற்கருகே அமைக்கப்பட்ட திவ்யசாலையில் காலையில் சாலாப்பிரவேசம் செய்து முறைப்படி ஸப்தாஹயக்ஞமாரம்பித்தார். விக்னேசபூஜை நாந்தி புண்யாஹவசநம் சுகவரணம் பரீக்ஷித்வரணம் பாகவத பூஜை. வேதபாராயணம் ஸஹஸ்ரநாமார்ச்சநம் அன்னதாநம் முதலியன நடந்தன. எண்ணிறந்தபக்தர்கள் சிரவணம் செய்கின்றனர். இதுமுடிந்தபின் விழுப்புரத்தில் பகவத்கீதோபன்யாஸம் நடத்துவார்

வடயல்கருப்பூர் உபன்யாஸம் தற்சமயம் நிறுத்தப்பட்டது.

V. S. ஜெயராமன்.

மிகச்சிக்கனம் பூர்ணகுணம்

'ஆத்ரேய'

குடும்ப ஔஷதப் பெட்டி.

ஸாதாரணமாக ஏற்படும் எல்லா வியாதிகளுக்கும் ஒரு சிறந்த வைத்தியருடைய உதவியைச் செய்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும்; பிரயாணம் செய்வோருக்கும் அத்யாவசியமானது.

ஒரு பெட்டி விலை ரூ 5—0—0

'ஆத்ரேய'

ஆயுர் வேதிக் ஒர்க்ஸ்,

தென்னூர் ரோடு, திருச்சினப்பள்ளி

WANTED.

Able and energetic hands to hold stocks in various centres. Must be capable of handling business tactfully and push through sales of high grown Nilgiri products of our Bengal Mattam Estate Teas, Coffee, and Potatoes. Decent salary, Commission. Godown rent and other allowances liberal. Apply to;-

The Franco—Trades (India) Society,

Royal Road, Mettupalaiyam

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க பிரசாரகோஷ்டி.

தஞ்சை ஜில்லாவில் ஸனாதந பிரசாரம்.

சாரதா, ஆலயப்பிரவேச சட்ட எதிர்ப்பு.

கணபதி அக்ரஹாரம்

திருவையாரிலிருந்து மதுரை டவுன் வ. சு. சங்க பிரசார கோஷ்டி அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கக் காரிய அத்யக்ஷகர் ஸ்ரீமான் ராவ்சாகிப் என் நடேச அய்யர் அவர்கள் தலைமையில் கணபதி அக்ரகாரம் வந்து சேர்ந்தார்கள். ஸனாதன தர்ம பிரசாரம் அவ்வூர் பிள்ளையார் கோவில் முன்பாக சுமார் 4 மணிக்கு ஜி. பி. சுப்ரமணிய அய்யர் பிரேரேபித்ததின்படி ஸ்ரீ எஸ். குப்புசாமி அய்யர் தலைமையில் நடைபெற்றது. முதலில் கடவுள் வணக்கம் மதுரை ஸனாதன தர்ம வித்யாலய மாணவிகளால் பாடபெற்றது. பிறகு ஸ்ரீ எம். செல்லையா பிள்ளை 2 திருப்புகழ் பாடினார். பிறகு ஸ்ரீ அய்யர் அவர்களை பற்றி அத்யக்ஷகர் அவர்கள் அறிமுகப்படுத்தி தற்காலத்தில் ஸனாதன தர்மத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை பற்றி பேசினார். பிறகு ஸ்ரீமான் அய்யர்அவர்கள் ஆலயப்பிரவேசம் எப்படி காங்கிரஸ்காரர்கள் செய்தார்கள் என்றும் அஹிம்சை ஸத்யம் எப்படி அவர்களால் கையாளபட்டு வருகிறது. என்றும் வருகிற எலக்ஷன் விஷயமாயும் பேசினார். பிறகு எம். செல்லையா பிள்ளை ஸரஸ்வதி பாஷ்யம் ஆகியோர் ஸனாதன தர்ம வித்யாலயத்தின் அவச்யத்தை பற்றியும் சாரதா சட்டத்தின் கொடுமை பற்றியும் பேசினார். சுமார் 6 மணிக்கு கூட்டம் முடிய பெற்றது சுமார் 150 ஜனங் குழுமி இருந்தார்கள்.

மாயவரம்

கும்பகோணத்தை விட்டு 21ம் தேதி காலை 10 மணிக்கு புறப்பட்டு சுமார் 12 மணிக்கு அ. இ. வ. சு. சங்க பிரசாரம் கோஷ்டி வந்து சேர்ந்தன. சுமார் 7½ மணிக்கு மகாதானத் தெருவிலிருக்கும் அம்பாபாய் சத்திரத்தில் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீராவ்சாகிப் என். நடேசய்யர் அவர்கள் பேசுகையில் 1936-ம் வருஷம் ஸ்ரீ அய்யர் அவர்கள் அவ்வருடம் காங்கிரஸ் சபைக்கு பிரசிடெண்டாயிருந்த ஜவஹர்லால் நேருவுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதாவது தாங்கள் மத விஷயங்களிலும் தலை இடவேண்டாம் நம்மிரு கக்ஷியினர்களுக்கும் ஸ்வராஜ்யம் தான் லக்ஷியம் ஆகையால் இது விஷயத்தில் தலையிடாமலிருந்து ஒன்றாக பாடுபடலாம் என்று எழுதினார் அதற்கு பதில் ராஷ்டிரபதியாய் விளங்குகிற ஜவஹர்லால் நேரு எழுதுகிறாராம். அதாவது ஸனாதனிகளான 25 கோடிமக்களும் காட்டும்பிராண்டிகள் ஆகையால் இந்த நாகரீகமான உலகில்வாழ இடமில்லை ஆகையால் இந்த ஸனாதனிகளுக்கு 3 ஸ்தானங்கள் கற்பிக்கிறேன் அதாவது மலைகளின் சிகரங்களிலும் மலையின் அடிவாரங்களில் காட்டு மிருகங்கள் வசிக்க கூடிய குஹத்வாரங்களிலும் தான் இவ்விரண்டிலும் போரா விட்டால் சமுத்திரத்திலுள்ள பாறைகளில் வசிக்கத்தான் லாயக்கு என்று பதில்கடிதத்தை பற்றி கூறி அவருடைய தயையையும் கருணையும் எவ்வளவு இருக்கு என்றுபேசி ஆலயபிரவேச சட்டத்தையும் கண்டித்து பேசினார். பிறகு செல்லையா பிள்ளை பாஷ்யாசாரி ஆகியோர் அ. இ. வ. சு. சங்கத்தின் 5 நிர்மாண திட்டங்களை எடுத்து உறைத்து வ சு சங்கத்தின் நோக்கத்தையும் எடுத்து பேசினார்கள் சுமார் 9மணிக்கு கூட்டம் வந்தனோபசாரத்துடன் முடிவு பெற்றது. 200 ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

ஆறுபாதி

22—5—40 ம் தேதி காலை 9 மணிக்கு புறப்பட்டு பிரம்மஸ்ரீ ராவ் சாகிப் என். நடேச அய்யர் அவர்கள் ஜன்மபூமியாகிய ஆறுபாதி கிராமத்திற்கு 9-45 மணிக்கு வ. சு. சங்க பிரசார கோஷ்டியுடன் வந்து சேர்ந்தார். இரவு 8 மணிக்கு அவ்வூர் சிவன் கோயிலில் ஓர்மாபெரும் ஸனாதன தர்ம பிரசாரக் கூட்டம் ஸ்ரீமான் நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மதுரை ஸனாதன தர்ம வித்யாலய மாணவிகளாலும் திருப்புகழ் எம். செல்லையா பிள்ளை அவர்களாலும் கடவுள் வணக்கம் பாடப்பெற்றது. பிறகு ஸ்ரீமான் அய்யர் அவர்கள் வ. சு. சங்க நோக்கங்களை பற்றியும் அது எந்த நோக்கத்துடன் வேலை செய்து வருகிறது என்றும் மதுரை தஞ்சாவூர் முதலான ஊர்களில் எவ்வளவு அக்கிரமமாக ஆலயப்பிரவேசம் நடைபெற்றது என்றும் அவைகளை கண்டித்தும் இப்பொழுது இந்த பாரத பூமியில் 5 கக்ஷிகள் இருக்கின்றன. அதாவது 1காங்கிரஸ், 2 ஜஸ்டிஸ், 3 ஹிந்து, மஹா சபை, 4, முஸ்லிம்லீக், 5 அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம் இவைகளுடைய நோக்கங்கள் என்ன வென்றும் 5வது ஆகிய அ. இ. வ. சு. சங்கத்தின் நோக்கத்தையும் எடுத்து பேசி வருகிற எலக்ஷன்களில் நல்ல நோக்கத்தை கொண்டு விருத்தியாகிக் கொண்டிருக்கிற அ. இ. வ. சு. சங்கத்தை சேர்ந்தவர்களுக்கே தங்கள் ஓட் உரிமைகளை கொடுத்து அஸெம்பிளி மெம்பர்களாகி இந்த ஆலயப்பிரவேச சட்டமோ, சாரதா சட்டமோ, இதை போல் பொதுஜனங்களுக்கு கெடுதலாக செய்திருக்கும் சட்டங்களையோ தக்கர்த்து தள்ளவேண்டும். என்று பேசி இப்பொழுது நடந்து வருகிற O S 48/39 கேஸ் விஷயமாயும் மதுரை சப்ஜட்ஜ் அவர்களால் பிறப்பிவைக்கப்பட்ட ஜட்ஜிமெண்டுகளையும் எடுத்து கூறினார். பிறகு திருப்புகழ் செல்லையாபிள்ளை, முன் சொன்ன 5 கக்ஷிகளில் நோக்கங்களை விவரித்தார்.

முடிகொண்டான்

இந்த கிராமத்தில் 22உமாலை 3½மணிக்கு ஒரு சனாதனதர்ம பிரசாரக கூட்டம் மாடி நாரயணஸ்வாமி அய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முதலில் கடவுள் வணக்கம் பாடப்பெற்றது.

பிறகு ஸ்ரீமான் நடேச அய்யர் அவர்கள் ஆலயபிரவேசத்தை கண்டித்தும் இனிமேல் எந்த கவர்ன்மெண்டாரும் மதவிஷயத்தில் தலையிடவொட்டாமல் செய்ய இந்த ஆலயப்பிரவேச கிளர்ச்சியை விருத்திசெய்து இந்த சட்டத்தையும்ரத்து செய்ய வழிகள் செய்து அவர்களுக்கு நற்புத்தி ஏற்பட செய்யவேண்டும் என்றும், கேஸ் o. s 48/39 விஷயமாய் ஆலயப்ரவேசம் எப்படி மதுரையில்திருட்டுத்தனமாகநடைபெற்றது என்றும் சங்க பலத்தின் அவசியத்தைப்பற்றியும் கூறினார். பிறகு சரஸ்வதி பாஷ்யம் ஆகியோர் சாரதா சட்டத்தையும் பாச்சாத்யப்படிப்பின் விளைவுகளைப்பற்றியும் பேசி ஸனாதன தர்மவித்யாலயத்தின் அவசியத்தை பற்றியும் பேசினார்கள். சுமார் 5 மணிக்கு ஜெயகோஷத்துடன்முடிவுபெற்றது. சுமார் 200 ஜனங்கள் வந்திருந்தார்கள்.

விஷ்ணுபுரம்

22உ சுமார் 8 30 மணிக்கு அவ்வூர் அக்கிரகாரத்தின் நடுவில் வ. சு. ச. பிரசாரம் நடைபெற்றது. ஸ்ரீமான் ராவ்சாகிப் என். நடேச அய்யர் அவர்கள் தற்காலத்தில் நம் ஹிந்து மதத்தை கெடுக்க அநேக கக்ஷிகள் கிளம்பி இருக்கின்றன அவைகளில் முக்கியமான து காங்கிரஸ் கக்ஷி அது ஜாதி இல்லை, வர்ணாச்ரம தர்மமில்லை, தீண்டாமை ஒழியவேண்டும் என்று கிளர்ச்சிசெய்து கொண்டு பாமர மக்களை ஏமாற்றி கொண்டுவருகிறது. ஆகையால் அவர்கள் நமது புனிதமான ஆலயங்களில் பிரவேசித்து அவைகளை அசுத்தி செய்துவிட்டார்கள் முக்யமாக மதுரையில் 1939 வருஷம் ஜூலை 8 தேதி ஒருவருக்கும் தெரியாமல் மந்திரிமார்கள் வருவதாக சொல்லி அங்கு ஒருவருமில்லாத சமயத்தில் திருட்டுத்தனமாக புகுத்திவிட்டார்கள். காங்கிரஸ்காரர்கள் தாங்கள் நம்மிடம் ஓட் வாங்க வரும் பொழுது மத விஷயங்களில் பிரவேசிக்க போகிறதில்லை ராஜ்ய விஷயத்தில் தான் பிரவேசிக்க போகிறோம் என்று சொல்லி நம்பிக்கை த்ரோகம் செய்தார்கள். ஆகையால் நாம் இனிமேல் இவர்களுடன் சல்லாபம் வைத்துக்கொள்ளக் கூடாது என்றும் ஆலயப்பிரவேச சட்டத்தை கண்டித்தும் பேசி வருகிற எலக்ஷன்களில் நமது வ. சு. சங்க தலைவர்களுக்கே ஆஸ்திக மகா ஜனங்கள் ஓட் செய்யவேண்டுமென்று பேசினார். சுமார் 10 மணிக்கு கூட்டம் கலையபெற்றது

கிடாரங்கொண்டான்

23உ மாலை 4மணிக்கு ஆறுபாதியை விட்டு புறப்பட்டு வ.சு.சங்கபிரசாரகோஷ்டி கிடாரங்கொண்டான் வந்தன. கிடாரங்கொண்டானுக்கும், புஞ்சை என்ற கிராமத்திற்கும் நடுவிலுள்ள மாரியம்மன் கோவிலில் ஓர் மாபெரும் ஆலயப்ரவேச எதிர்ப்பு கூட்டம் நடைபெற்றது. கூட்டம் ஸ்ரீமான் அய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முதலில் திருப்புகழ் எம். செல்லையா பிள்ளை காங்கிரஸ்காரர்கள் பொது மக்களை மனம் நோக செய்த தீய செயல்களை கண்டித்தும் இந்த ஆலயப்ரவேச சட்டத்தைக்கண்டித்தும் பேசினார். பிறகு ஸ்ரீமான் அய்யரவர்கள் ஜூன்மீ 13 தேதி மதுரையில் நடைபெற்ற ஹரிஜன மகாநாடு நடந்தது முதல் இப்போது நடந்து வருகிற O/S 48 39 சூட் விஷயம் வரை அவர்கள் 2¼ வருடத்து செய்த அட்டூழியங்களை எடுத்துரைத்தார். பிறகு அ. இ. வ. சு. சங்க நோக்கத்தையும் சொல்லி தேர்தல்கள்விஷயமாயும் பேசினார். திருப்புகழ் எம். செல்லையா பிள்ளை பேசுகையில் ஒரு விஷமகாரர் பேச்சை நிறுத்திவிட ஏற்பாடுகள் செய்தார். அந்த பாச்சா நடக்காமல் போய்விட்டது. பிறகு அய்யர் அவர்கள் பேசுகையில் அவரே எழுந்து தான் செய்தது தவறு என்று உணர்ந்து அவரே உடன் இந்த சங்கத்தின் நோக்கங்களைமெச்சி பேசினார். சுமார் 6-30 மணிக்கு கூட்டம் முடிவுபெற்றது. சுமார் 200ஜனங்கள் குழுமி இருந்தார்கள். பாதிக்குமேல் ஹரிஜனங்களே விஜயம் செய்திருந்தார்கள்

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

கோனேரிராஜபுரம்

ஸ்ரீ ராவ் சாகிப் என். நடேசய்யருக்கு குதூஹல வரவேற்பு.—

ஸ்ரீஎன். நடேச அய்யர், முடிகொண்டான், விஷ்ணுபுரம் முதலிய இடங்களில் பிரசாரம் செய்துகொண்டு காலை 8-மணிக்கு இவ்விடம் வந்து சேர்ந்தார். 25—5—40 சனிக்கிழமை இவ்வூர் பெருமாள் கோவில் எதிரில் அமைத்த பந்தலில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இவ்வூர் மிராசுதார் ஸ்ரீமான் என். ஆர். சுவாமிநாதய்யர் தலைமையில் நடைபெற்றது. இவ்வூர் கே. என். தேவராஜ பாகவதர் அவர்கள், நடேசய்யர் இவ்வூர் வந்தது நமது பெரும்பாக்யம் என்றும் திருட்டுத்தனமாக மதுரையில் ஆலயப்பிரவேசம் செய்த அக்ரமத்தையும் காங்கிரஸ்காரர்கள் செய்த சாரதாசட்டம், தீண்டாதார் ஆலயபிரவேசம் இவைகளைக் கண்டித்தும் கிளைஸ்தாபனங்களை பத்தி வெகு விரிவாக பேசினார். ஸ்திரீகள் சங்கீதங்கள் நடைபெற்றது.

ஸ்ரீ நடேசஅய்யர் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தைப் பற்றியும் மெம்பர்கள் சேர்க்க வேண்டியதையும், ஜெவஹர்லால் எழுதிய லட்டரில் கண்டபடி சனாதனிகளை தூஷித்து எழுதியதை கண்டித்து அவர்கள் செய்த அக்ரமத்தையும் மதுரையில் நடக்கும் ஸூட்டையும் விரிவாக பேசினார். திருட்டுத்தனமாக நடந்துவந்ததினால் 15-7-39வ யிலிருந்து காங்கிரஸ்க்கு மந்திரிபதவி விலகினதையும் உலகத்திற்கு வந்த ஜெர்மனி ஐரோப்பாயுத்தபயத்தையும் விரிவாக சொல்லி 5 மணி வரையில் பிரசங்கம் செய்தார்.

பிறகு இவ்வூர் ஸ்ரீ ரெங்கசாமி அய்யங்கார் தலைவர் வந்த சந்தோஷத்தையும், காந்திஜி, ஸி. ராஜகோபாலாசாரியார் முதலிய காங்கிரஸ்காரர்கள் செய்த கொடுமையை கண்டித்து ஆலயப்பிரவேசம் செய்துவைத்த ஜனங்களுக்கு ஈச்வரன் தான் சிக்கிரம் தகுந்தசிக்ஷை செய்யவேணுமென்று விரிவாகப் பேசினார். மதுரை சரஸ்வதி என்கிறசிறுபெண் சாரதாசட்டத்தை கண்டித்து பேசினது போற்றத்தக்கது சிறுபையன் வர்ணாச்ரம யுவர் சங்கம் காங்கிரஸ் செய்கிற கொடுமையையும் விரிவாக பேசினார். கீழ்கண்ட கிளைஸ்தாபனங்களுடைய மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஸ்ரீ ஏ. ராதாகிருஷ்ணய்யர், பிரஸிடெண்டு. ஸ்ரீ கே. ஆர். சுப்பிரமணியய்யர், (வைஸ்பிரஸிடெண்டு) கே. எஸ். மஹாலிங்க அய்யர், (காரியதரிசி) கே. வி. சுப்ரமணிய அய்யர், (பொக்கிஷதார்) கே. எஸ். விச்வநாதய்யர், ஜி. சுப்பிரமணியன், கே. வி. விச்வநாதய்யர், கே. எஸ். நாகேச்வரய்யர், ஜீ. சுப்பிரமணிய்யர், கே. கோபாலய்யர், டி. எஸ். சுப்பய்யர், கே. வீ. விச்வநாதய்யர், கே. எஸ். தேவராஜய்யர், கே. எஸ். ராமய்யர், கே. ராமமூர்த்தி, எஸ். சிவராமய்யர், வீ. வீ. நாராயணசாமிய்யர், இன்னும் சில மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பிறகு 6மணிக்கு கே. என். தேவராஜ பாகவதர் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் நோக்கத்தையும், எல்லா கிராமங்களிலும் ஸ்ரீ நடேசய்யர் அவர்களை வரவழைத்து கிளை ஸ்தாபனம் செய்யவேண்டும் என்றும் திப்பிராஜபுரம், ஆனைதாண்டவபுரம், முதலிய இடங்களில் தலைவர்கள் வரப்போகிறபடியால் அவ்வூர் மகாஜனங்கள் வெகு உத்ஸாகத்துடன் வரவேற்க வேணுமென்று விமர்சையாக பேசி வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் கலைந்தது. பிறகு தலைவர் சேங்காலிபுரம், திருவாரூர் முதலிய இடங்களில் பிரசாரம் செய்யப் புறப்பட்டார் என்று காரியதரிசி எழுதுகிறார்.

சீர்காழி மீட்டிங்

ஷியூர் சட்டநாதர் கோவில் முன்பாக மாலை 7-20க்கு ஒரு மா பெருங் கூட்டம் நடைபெற்றது. கே. எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஸ்ரீமாஸ டி. சுந்தராசாரியார் அவர்களைத் தலைமை வகிக்கும்படி பிரேரேபித்தார்கள். முதலில் ஸனாதன தர்ம வித்யாலய மாணவிகள் கடவுள் வணக்கம் செய்தார்கள். பிறகு சௌ சரஸ்வதி சாரதா சட்டத்தைப்பற்றியும் ஸ்ரீமான் ராவ்சாகேப் என். நடேசய்யர் அவர்கள் சனாதனதர்மத்தின் நோக்கங்களும் சென்னை மாஜி காங்கிரஸ் மந்திரிமார்களால் செய்துள்ள ஆலய பிரவேச சட்டத்தை கண்டித்து மதுரையில் நடந்துவருகிற ஓ. எஸ். 48/39 ஸூட் விஷயமாயும் அ. இ. வ. சு. சங்கத்தின் கிளை சீர்காழி தாலூகாவில் நிறுவவேண்டியதைப் பற்றியும் பேசினார்கள். ஷியூரில் அ. இ. வ. ஸ்வராஜ்ய சங்கமொன்று ஸ்தாபித்து அதற்கு கீழ்கண்டவர்களை நியமித்திருக்கிறது. வி. எஸ். சதாசிவமுதலியார் அவர்கள் பிரஸிடெண்டாகவும், டி. சுந்தராசாரியார் அவர்கள் வைஸ்பிரஸிடெண்டு, ஸி. ராமநாத முதலியார் அவர்கள் செகரட்ரி, டிரஷரர், கே. எஸ். சுப்ரமணிய அய்யர் அவர்களும் இன்னும் சில கமிட்டி மெம்பர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறது. இத்துடன் இரவு 2.15-க்கு கூட்டம் கலைக்கப்பட்டது. சுமார் 900 பேர்கள் வந்திருந்தார்கள்.

நாகப்பட்டணம்,

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத் தலைவர் மதுரை ராவ்சாகிப் பிரம்மஸ்ரீ என். நடேசய்யர் அவர்கள், பிரசாரக்கோஷ்டியுடன் திருவாரூரிலிருந்து புறப்பட்டு அவ்வூரில் ஸ்தாபனம் செய்யப்பட்ட சாகா சங்கத்தின் தலைவர் வக்கீல் என். சாம்பசிவ அய்யரவர்களுடன் புறப்பட்டு சிக்கலில் ஸ்வாமிதரிசனம் செய்துவிட்டு நாகப்பட்டிணம் ஹிந்துமதாபிமான சங்கம் காரியதர்சி ஸ்ரீ என். சாம்பசிவய்யர் ஜாகையில் 18—5—40 செவ்வாய்கிழமை காலையில் வந்து இறங்கினார்கள். கோஷ்டியுடன் திருப்புகழ் செல்லய்யா பிள்ளை அவர்களும் மதுரை சனாதன தர்ம வித்யாலயம் மாணவ மாணவிகளும் வந்திருந்தார்கள்.

அன்று மாலை சிக்கல் சிங்கார வேலவர் ஆலயத்தில் ஓர்பொதுக்கூட்டம் நடைபெற்றது. தேவஸ்தானம் ஸ்ரீ துரைசாமி அய்யங்கார் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு நாகபட்டிணம் ஸ்ரீ என். சாம்பசிவ அய்யர் அவர்கள் அக்ராஸனம் வகித்தார்கள். தர்ம வித்யாலயம் மாணவிகளால் இனிய குரலுடன் ஸ்தோத்திரங்கள் சொல்லப்பட்ட பிறகு ஸ்ரீ என். சாம்சிவ அய்யரவர்கள் ஸ்ரீ நடேசய்யர் அவர்களுடைய விசேஷமான வேலையையும் தியாகத்தையும் புகழ்ந்துபேசி அவர்களை உபன்யசிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.

பிறகு ஸ்ரீ நடேசய்யரவர்கள் காங்கிரஸ் ஸ்தாபனம் முதல் எவ்விதம் ராஜ்ய முறையில் மாத்திரம் அழகாக வேலை செய்து வந்திருக்கிறதென்றும் இப்பால் மகாத்மா காந்தியினுடைய சம்பந்தம் ஏற்பட்டபிறகு மத விஷயங்களில் சம்பந்தப்பட்டு வர்ணாச்ரம தர்மத்திற்கு விரோதமாக சட்டங்கள் செய்யப்பட்டு மதத்திற்கு ஹானிஉண்டாக்கப்பட்டு வருகிறதென்றும் சொல்லி மதுரையில் திருட்டுத்தனமாக ஆலயப்ரவேசம் நடந்ததையும் அதற்கு பிறகு இப்போது நடந்துவரும் விவகாரத்தின் தோரணையையும் அழகாக எடுத்துப்பேசினார்கள். பிறகு சிக்கலில் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் சாகா சங்கம் ஒன்று ஸ்தாபனம் செய்யப்பட்டது.

அன்று இரவு 7 மணிக்கு கோஷ்டியார் நாகைக்கு விஜயம் செய்தார்கள். சிவன் கோவிலில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பிராமண சபா காரியதர்சி நாராயணசாமி அய்யரவர்கள்ால் பிரேரேபிக்கப்பட்டு நாகப்பட்டிணம் என். சாம்பசிவ அய்யரவர்கள் அக்ராஸனம் வகித்தார்கள். அக்ராஸனரவர்கள் காங்கிரஸ் கக்ஷியாரின் அக்ரமமான நடவடிக்கைகளைகண்டித்துப்பேசி ஸ்ரீமான் அய்யரவர்களுடைய அரிய பெரிய வேலைகளையும் தியாகத்தையும் புகழ்ந்து அவர்களை உபன்யசிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். ஸ்ரீமான் நடேசய்யரவர்கள் பேசுவதற்கு முன் மதுரை ஸனாதன வித்யாலயத்தின் மாணாக்கனான பாஷ்யாசாரி என்ற சிறுவன் வர்ணாச்ரம தர்மமானது மிகவும் சீர்குலைந்து கிடக்கிறதென்றும் அதற்கு முக்யமான காரணம் காங்கிரஸ் கக்ஷியாரின் பிரசாரமென்றும் ஒவ்வொரு கிரகத்திலும் ஸனாதன தர்ம வித்யாலயம் ஸ்தாபிக்கப்பட்டு ஸனாதனதர்மத்தின் தத்வங்கள் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் போதிக்கப்படவேண்மென்றும் பேசிய பிறகு ஸரஸ்வதி என்ற சிறுமியானவள் சாரதா சட்டத்தைப் பற்றியும் நம்முடைய சிறுமிகள் பழமையான பழக்கங்களை அனுஷ்டிக்க வேண்டுமென்றும் சினிமாவுக்குப் போவதை பெண்கள் அறவே ஒழிக்க வேண்டுமென்றும் அழகாகப் பேசினார்கள்.

ஸ்ரீமான் நடேசய்யர் அவர்கள் பிறகு ஆலயப்பிரவேசத்தைப் பற்றி விரிவாகப் பேசி காங்கிரஸ் கக்ஷியாரின் அநீதியான பிரசாரத்தையும் நடவடிக்கைகளையும கண்டித்துப்பேசி வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் நோக்கங்களையும் எடுத்து காட்டி நாகூரில் ஒரு சாகா சங்கம் ஸ்தாபிக்கப்கடவேண்டுமென்றும் சொன்னார்கள் உடனே ஒரு சாகா சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

அக்ராசனரவர்கள் பேசிய பிறகு வந்தனோபசாரங்கள் கூறப்பட்டு சபையானது முடிவு பெற்றது.

மறு தினம் கோஷ்டியார் காலையில் தஞ்சை ஞாயருக்கு புறப்பட்டு போனார்கள். ந. கி.

திருத்துரைப்பூண்டி

ஸ்ரீ என். நடேசய்யர் அவர்கள் சென்ற 30—5—40ல் திருத்தருப்பூண்டிக்கு விஜயம் செய்து சார்தா சட்டம் டெம்பிள் என்ட்ரீ ஆக்ட் காங்கிரஸின் அநீதிகள் இவைகளைப்பற்றி திருக்குளம் ஸ்ரீராமமடத்தில் உபந்யாஸம் செய்தார்கள். காங்கிரஸின் தற்கால விபரீதமான கொள்கைகளையும், சாரதா சட்டம் டெம்பிள்என்ட்ரி ஆக்ட் இவைகளின் கெடுதல்களையும் மிகவும் அழகாகவும், அருமையாகவும் விஸ்தரித்து உரைத்தார்கள். ஸ்ரீமான் நடேசய்யர் அவர்கள் அவருடைய பல வேலைத் தொந்திரவுகளையும் கவனிக்காமல் தர்மபிரசாரம் செய்வது மிகவும் போற்றத்தக்கது. இந்த ஊரில் அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டதுடன் அதற்கு அங்கத்தினர்களும் ஏற்படுத்தப்பட்டது.

(ஒ-கி)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்

விக்ரம-ஞு வைகாசி-மீ 24உ

நல்ல புத்தி உதயம்

ஐரோப்பிய யுத்த நிலைமை மிக நெருக்கடியாயிருக்கிறது. ஹிட்லரின் அட்டஹாஸம் அதிகரித்து வருகிறது. கடைசியில் அது மாய்ந்து போவது திண்ணம். ஆயினும் தற்காலம் அதன் நிலைமையானது உலகத்தைக் கவலையில் ஆழ்த்தியிருக்கிறது. இச்சமயத்தில் இந்தியாவானது எல்லா வழியிலும் பிரிட்டனுக்கு உதவவேண்டிய தவச்யமாயிருக்கிறது. காந்தி நேரு, போன்றவர்கள் கூட இதை உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்திய அரசியல் நிலைமையில் ஏற்பட்டுள்ள சிக்கலும் தீரவேண்டியது தான். ஆனால் யுத்த ஸமயத்தில் இந்தச் சிக்கலை காங்கிரஸ்காரர்கள் தாங்களாகவே ஸிருஷ்டித்துக் கொண்டது புத்திசாலித்தனமாகாதென்று ராஜதந்திரிகள் பலர் அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார்கள். ஆயினும் காங்கிரஸானது ஸத்யாக்ரஹப் போராட்டம் ஆரம்பிக்க ஆர்ப்பாட்டம் செய்து வந்தது. இந்தியாவின் க்ஷேமத்தில் உண்மையான சிரத்தை கொண்டவர்களுக்கெல்லாம் இது கவலையைக் கொடுத்து வந்தது. தேசத்தில் வகுப்பு வாதமும், கக்ஷிச் சண்டைகளும் வலுத்து ஒற்றுமை அடியோடு குலைந்து நிற்கிறது இச்சமயத்தில் ஸத்யாக்ரஹத்தை ஆரம்பித்தால் உள் நாட்டுக் கலஹம் தீவிரமாகிவிடுமென்று பலரும் பயந்தனர். கவர்ன்மெண்டாரும் இந்த யுத்த ஸந்தர்ப்பத்தில் ஸத்யாக்ரஹத்தை அடக்க பலமான முறைகளைக்கையாள வேண்டி வரும். ஆகவே ஸத்யாக்ரஹம் ஆரம்பிப்பதை நிறுத்திவிடவேணுமென்று எங்கும் அபிப்பிராயம் பரவி நிற்கிறது.

இந்த நிலைமையில் இப்போது காந்திஜியே ஸத்யாக்ரஹத்தை ஆரம்பிக்கப் போவதில்லையென்று வெளியிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஐரோப்பிய நிலைமை அபாயமாகி பிரிட்டன் பெரும் கவலையில் ஆழ்ந்து கிடக்கையில் அதை வேறு வழியிலும் சிரமத்திற்குள்ளாக்குவது நியாயமன்று, ஸாத்யமுமன்று.

ஆதலால் காந்திஜி, யுத்தம்தணியும்வரையில் தாம் காத்துக்கொண்டிருக்கப் போவதாக ஜூன்-மீ 1உ யன்று தமது பத்திரிகையில் சொல்லியிருக்கிறார், அதாவது:—

"பிரிடிஷ் கவர்ன்கமண்டார் உடனே இந்தியாவிற்கு அரசியல் நிர்ணய உரிமை அளிக்காவிடினும் கூட இப்போது மும்மரமாக நடக்கும் யுத்தம் தணியும் வரையில் நாம் பொறுத்திருக்கவேண்டு மென்பது என் அபிப்பிராயம். பிரிட்டன் அழிந்து, நாம் சுயேச்சைபெற விரும்பவில்லை. அது அஹிம்ஸா முறைக்கு ஏற்றதன்று,,

இவ்வாறு காந்திஜி தெளிவாகக்கூறியிருப்பதைப்போலவே ஸ்ரீமான்ஜவஹர்லால் நேருவும் ஸ்பஷ்டமாகச் சொல்லிவருகிறார். எதிராளி மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கும் தருணத்தில் நாம் ஸத்யாக்ரஹம் ஆரம்பிப்பது அதர்மமென்று நேருஜி அபிப்பிராயப்படுகிறார்.

ஆகவே யுத்தம் முடியும் வரையில் ஸத்யாக்ரஹம் ஆரம்பிக்கபடாதென்பது நிசசயமாகிறது.

இப்போது சத்யாக்ரஹம் நடந்தால் கவர்ன்மெண்டார் முழுபலத்தைஉபயோகித்து ஒரு நொடியில் அதை நசுக்கிவிட முடியும். தேசத்தில் ராணுவ ஆக்ஷி போன்ற நிர்பந்த நிலைமையும் ஏற்படக்கூடும். ஆதலால் காந்திஜி ஸாமார்த்தியமாக சமாதானம் சொல்லி கொண்டு பின்வாங்க நிச்சயித்தது ராஜ தந்திரம் நிறைந்த செய்கையே யாகும்.

சத்தியாக்ரஹத்தை நிறுத்தியதற்கு காந்திஜி யுத்தத்தை மட்டும் காரணமாக காட்டாமல் வேறு சில விஷயங்களையும் குறிப்பிட்டுள்ளார். காங்கிரஸ் காரர்களுக்குள்ளேயே ஒற்றுமை கிடையாது. பலாத்கார புத்தியும் அஹிம்ஸையில் அவநம்பிக்கையும் அவர்களிடம் குடிகொண்டிருப்பதாக காந்திஜீ ஒளிமறைவின்றி வெளியிடுகிறார்.

மேமீ 24உ ஹரிஜன் பத்திரிகையில் காந்திஜீ சொல்லுவதை கவனியுங்கள்

"காங்கிரஸ்காரர்களிடம் பலாத்காரம் அதிகமாயிருக்கிறது. சுயநலமும் மிஞ்சியிருக்கிறது. இதை ருஜூப்படுத்த என்னிடம் அளவுகடந்த ஆதாரங்கள் இருக்கின்றன"

"கரங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே பலருக்கு அஹிம்ஸையில் நம்பிக்கையில்லை

காங்கிரஸ்காரர் யோக்யதை மேற்கண்டபடி இருந்தால் அவர்களை வைத்துக்கொண்டு காந்திஜி ஸத்யாக்ரஹம் ஆரம்பிக்க ஒரு நாளும் அவகாசமில்லை தான். தற்காலம் காந்திஜி யுத்த நெருக்கடியை வியாஜமாகக் கூறிய போதிலும், எப்போதுமே இந்த காங்கிரஸ்காரர்களை வைத்துக் கொண்டு ஸத்யாக்ரஹம் நடத்த முடியாதென்பதை அவர் ஒப்புக் கொள்ளுவதாகிறது.

மேலும் காங்கிரஸானது, தனது யதேச்சாதிகார ஆக்ஷியாலும், அளவு கடந்த அலக்ஷ்ய புத்தியாலும் தேசத்தில் எல்லாப் பிரிவினருடையவும் அளவற்ற வெறுப்புக்கு ஆளாகி நிற்கிறது.

இந்நிலைமையிலும் அதுஸத்யாக்ரஹம் ஆரம்பித்தால் தோல்வி நிச்சயமென்பது தலைவர்களுக்குத் தெரிந்ததே. அதனால் தான் அவர்கள் இப்போது, தேசத்தில் எல்லோரும் ஒற்றுமைப்படவேண்டுமென்ற பல்லவியை அதிகம், பாட ஆரம்பித்துள்ளார்கள் ஆயினும் ஒற்றுமை ஏற்படுவதற்கான வழியை விட்டு, வேற்றுமை அதிகரிக்கும் வழியிலேயே அவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். இந்தக் குற்றம் அவர்களுக்குப் புலப்படவில்லை. தேச ஜனங்களின் ஸமூஹ மத உரிமைகளுக்கு நாசம் செய்யும் வரையில் காங்கிரஸ் தலையெடுக்க வழியில்லையென்ற உண்மையையும் இச்சமயம் தலைவர்கள் உணருவது நலம். எப்படியும் யுத்த நெருக்கடி வியாஜத்தினாலாவது தற்காலம் ஸத்யாக்ரகத்தை நிறுத்த நல்ல புத்தி உதயமானது சிலாகிக்கத்தக்கதே.

ஜய பிரார்த்தனை

யுத்தத்தில் நம்து மன்னருக்கு ஜயம் ஏற்படவேண்டுமென்று 26உயன்று தேசமெங்கும் பிரார்த்தனை நடத்தப்பட்டது. அந்தந்த வகுப்பு தேவாலயங்களில் அந்தந்த ஸம்பிரதாயங்களையொட்டி தெய்வங்களுக்கு பூஜை முதலானவை செய்யப்பட்டன.

இதையொட்டிச்சில விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டியவை. ஆங்கிலேயர் போன்றவர்களுக்கும், தேவாலயங்களில் தெய்வப்ரார்த்தனைகளில் நம்பிக்கையிருப்பது ஒரு விசேஷம். இந்த நாஸ்திக காலத்தில்கூட ஆபத்ஸமயத்தில் தெய்வத்தினிடம் செல்வது அவச்யமென்ற புத்தியிருப்பது அதிசயம். ஐரோப்பாவில் ஆகாசவிமானங்களும், யுத்தக்கப்பல்களும், ஸப்மரீன்களும், யுத்தமோட்டார்களும் பயங்கரபீரங்கி சப்தத்துடன் தாக்கிவருவதை, இந்த தெய்வ பிரார்த்தனைகள் பதிலுக்குத் தாக்கி நிறுத்திவிடமுடியுமா என்ற நாஸ்திக வாதம் வெகு ஸுலபமானது. வெகு எளிதாக பாமரர் மனதில் படியக்கூடியது. புத்திமான்களான குதர்க்கிகளும் ஏற்கக்கூடியது. ஆயினும் இந்த பிரார்த்தனை மூலம் தெய்வமானது மேற்கண்ட கோரயுத்தத்தை தடுக்கும் சக்திவாய்ந்ததென்ற நம்பிக்கை எங்கும் இன்றைக்கும் மறைந்துபோகவில்லை. சாஸ்திரங்களைக்கொண்டே இதை அறிகிறோம். அநுபவத்திலும் பலர் அறிந்துள்ளார்கள்.

தேவாலயங்கள், பிரஜைகளுடையவும் அரசனுடையவும் ஆபத்தைத் தடுத்து க்ஷேமத்தைக் கொடுக்கவே ஏற்பட்டவை. அங்கு, நடக் நும் பூஜை பிரார்த்தனைமுதலியவைகளின் முக்ய நோக்கம் அதுவே தவிர வேறில்லை. ஆகவே தேவாலயங்களையும், அங்கு நடக்கும் பிரார்த்தனை முறைகளையும் வழக்கபடி நடத்திவைத்துக் காப்பாற்ற வேண்டியது அரசர்களின் கடமையாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும்,

மத நம்பிக்கையும் தெய்வநம்பிக்கையுமில்லாமல் தமாஷாக ஆக்ஷிபுரிந்த ஒரு கக்ஷியார் தேவாலயங்களை அசுத்தப் படுத்தும் கார்யத்தில் இறங்கி அவைகளில், பூஜை, பிரார்த்தனைகள் ஒழுங்காக நடக்கவொட்டாமல் செய்து தெய்வாபசார கார்யங்களை செய்து விட்டார்கள்.

ஆலயப்பிரவேசத்தால் தெய்வ ஸான்னித்யம் கெடுவதுடன், ராஜா, ராஷ்ட்ரம், பிரஜைகளுக்கும் தீங்குநேருமென்றும், வியாதி துர்பிக்ஷம், மரணம் இவைகள் அதிகரிக்குமென்றும் தேவாலயச்சட்டமான ஆகமம் கூறுகிறது. இதை அனேக கூட்டங்களில் ஆஸ்திகர்கள் எடுத்துக்காட்டியும் வந்தார்கள். ஆனால் காங்கிரஸ் வாலாக்கள் ஏளனம் செய்தார்கள்.

"எதற்குப்பின் எதுஏற்படுகிறதோ, அது அதற்குக் காரணம்" என்று ஒரு நியாயமுண்டு. ஆஸ்திகர்கள் இதை நம்புகிறார்கள் ஆலயப்பிரவேசம் நடந்த உடனேயே யுத்த கஷ்டம் தோன்றியதால் இரண்டிற்கும் கார்யகாரண ஸம்பந்தமுள்ளதென்பது ஆஸ்திகரின் அசைக்கக்கூடாத நம்பிக்கை. ஆகமமே அப்படிக்கூறுகிறதல்லவா? அதுமெய்யாகி விட்டதல்லவா?

தர்ம, நீதி முறைதவறிய காங்கிரஸ் ஆக்ஷியே இந்த கஷ்டத்திற்கு காரண மென்று ஆஸ்திகபுத்தியுள்ளவர்களின் நம்பிக்கையை யார் மாற்றமுடியும்?

அரசனுக்கும், பிரஜைகளுக்கும் கஷ்டம் விளைத்த காங்கிரஸ் ஆக்ஷி முறைக்கு நமது கவர்ன்மெண்டார் இனி இடம் கொடாமல்

மத விஷயமாக பலத்த பாதுகாப்புச்செய்வது அவசியமென்று மதுரை முதலானவிடங்களிலுள்ள ஆஸ்திகர்கள் பிரார்த்தனைதினத்தன்று நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை சர்க்கார் கவனிப்பது அவசியமாகும். இது பேரம் பேசும் முறையில் செய்யப்பட்ட தீர்மானமல்ல. தெய்வத்தையும் தர்மத்தையும் ஸம்ரக்ஷித்து அதன்மூலம் உலகக்ஷேமத்தை நிலை நிறுத்தும்படி ஞாபகப்படுத்துவதேயாகும். ஒரு நிருபர்.

நாகூர்

ஸனாதன தர்ம பொதுக்கூட்டம்

பிரும்மஸ்ரீ ராவ்சாகேப் என். நடேசய்யர் அவர்களின் அரிய சொற்பொழிவு

அகில இந்திய வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் கார்ய அத்யக்ஷகரும் மதுரை பிரபல அட்வகேட்மான பிரம்மஸ்ரீ ராவ்சாகிப் என். நடேசய்யர் அவர்கள் தென்னிந்தியாவில் ஸநாதன தர்மப் பிரசாரம் புரிந்து சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டு வருவதில் 28—5—40வ இரவு 8 மணிக்கு பிரபல ஸநாதன தலைவர்களாயுள்ள திருவாரூர் அட்வகேட் பிரம்மஸ்ரீ எம். ஆர். சாம்பசிவய்யர், நாகை அட்வகேட் பிர்ம்மஸ்ரீ என். சாம்பசிவய்யர், மதுரை ஸனாதன தர்ம வித்யாலயத்து மாணவர்கள் மாணவிகளில் சிலர் இவர்கள் சகிதம் இவ்வூருக்கு விஜயம் செய்தார்கள். அவர்கள் வருகையை முன்னிட்டு முன்னாடியே ஓர் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடாகி இருந்தபடி இவ்வூர் சிவன் கோவில் ஸ்ரீ அம்பாள் சன்னதியில் பொதுக்கூட்டம் ஆரம்பமாகியது.

ஆஸ்திக்யம் நிறைந்த அருங்குண சிலர்களான ஆடவரும், பெண்டிரும் ஏராளமாக குழுமியிருந்தனர். கூட்டத்திற்கு நாகை ஹிந்து மதாபிமான சங்கத்து காரியதரிசியும் அட்வகேட்டுமான பிரம்மஸ்ரீ என் சாம்பசிவய்யர் அவர்கள் அக்ராஸனம் வகித்தார்கள். கடவுள் வணக்கத்துடன் சபை ஆரம்பிக்கப்பட்டது. மதுரை ஸநாதன தர்ம வித்யாலயத்து மாணவிகளால் பகவத் ஸ்தோத்திரங்கள் கானம் செய்யப்பட்டன. அக்கிராஸனர் தனது முகவுரையில் பிரம்மஸ்ரீ நடேசய்யரவர்கள் தர்மத்திற்கும், பொதுஜன நன்மைக்கும், சமூகத்துக்கும் சலிபாது உழைத்துவரும் அரிய தியாகத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். பின்னர் மதுரை ஸநாதன தர்ம வித்யாலயத்து மாணவரும், மதுரை தார்மிக யுவ சங்கத்தின் அங்கத்தினருமான 9 வயதுள்ள ஸ்ரீமான் பாஷ்யாச்சாரி என்னும் சிறுவன் "யுவர் கடமை" என்பது பற்றி பிரஸிங்கித்தார். பின்னர் வித்யாலயத்து மாணவி 8 வயதுள்ள ஸ்ரீமதி சரஸ்வதி "விவாஹம், சாரதா சட்டம்" என்னும் பொருள்பற்றி பேசினார்கள். குழந்தைகளான இவர்களின் அருமையான சொற்பொழிவுகள் சபையோர்களை மிக்க சந்தோஷத்துக்குள்ளாக்கியது.

பின்னர் அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க கார்யஅத்யக்ஷகர் பிரம்மஸ்ரீ என். நடேசய்யர் அவர்கள் நமது தர்மத்தைப்பற்றியும், கடமையைப்பற்றியும் நமது தர்மத்திற்கு ஏற்பட்டிருக்கும் பலஇடுக்கண்களைப்பற்றியும் அதை நிவர்த்திக்க வேண்டி நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றியும் ஆலயபிரவேச விஷயமாக நாம் எதிர்த்து போராட வேண்டியதின் ஆவசியத்தைப்பற்றியும் ஸ்ரீமான்களான லோகமான்ய பாலகங்காதர திலகர் சி. ஆர். தாஸ்போன்ற பிரபல காங்கிரஸ் அறிஞர்கள் காலத்தில் காங்கிரஸ் ஸ்தாபனம் பொருளாதார விஷயத்திலும் ராஜீய விஷயத்திலும் மட்டுமே ஈடுபட்டு உழைத்துவந்தார்களென்றும் ஆனால் ஷை ஸ்தாபனம் தற்போது மத விஷயத்திலும் இடுபட்டு தகாத காரியங்களைச் செய்து வருகின்றார்களெனவும் ஆகவே நாம் தர்ம ரக்ஷணம் புரிவோமானால் இவைகளை நாம் சகியாமல் ஒரு முகமாக எதிர்த்து போராடி நமது கடமையைச் செய்யவேண்டுமென்றும் சாரதா சட்டத்தினால் ஏற்பட்ட தீமைகளை பற்றியும் குறிப்பிட்டு தர்ம ரக்ஷணத்தின் பொருட்டு ஒவ்வொரு நகர்களிலும் கிராமங்களிலும் தர்ம ரக்ஷண சபா இருந்து வரவேண்டியது அவசியமென்றும் அவ்விதமான ஸபைகளை பக்தி சிரத்தையுடன் ஏற்படுத்தி நடத்தி நன்மையடைய வேண்டியது நமது கடமை என்பதையும் எடுத்து காட்டி இவ்வூரில் அவ்வித ஸபை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டார்கள். அதன்படி "வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம்" ஒன்று ஸ்தாபனம் செய்யப்பட்டது. அச்சபைக்கு அடியில் கண்டபடி உத்யோகஸ்தர்களும் உடனே ஏகோபித்து ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பிரம்மஸ்ரீ என். வ. பட்டாபிராமய்யரவர்கள், அத்யக்ஷகர் (சபா நாயகர்) ஸ்ரீமான் எஸ். வ. கணபதி செட்டியார், உப அத்யக்ஷகர் (உபசபாநாயகர்) பிர்ம்மஸ்ரீ என். நாராயணசாமி அய்யர் காரியதரிசி, & பொக்கிஷதார், கே. வெங்கடசுப்பிரமணிய அய்யர் கமிட்டி மெம்பர், ஸ்ரீமான் பக்கிரிஸாமிப் பிள்ளை, பிர்ம்மஸ்ரீ எஸ். ராமசாமி அய்யர், ஸ்ரீ டி. வீராஸாமி அய்யர், என். ராஜகோபாலய்யர், ஸ்ரீமான் எஸ். வ. ஆர். நமசிவாய செட்டியார்.

அக்கிராசனர் முடிவுரையில் "ஸனாதன தர்மம்" பற்றி சிலவாக்யங்கள் பேசி முடிந்ததும் வந்தனோபசாரம் கூறப்பட்டு சபை இரவு மணி 11க்கு இனிது முடிந்தது. (ஈ. நி.)

அனந்தப்பூரில் வைதிக பிரசாரம்

ஆனந்தப்பூர் அத்வைத ஸபையின் ஆதரவில் மே மீ 28வயன்று ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமான் கே. வி. ஸுப்பண்ணு அமாத்யா அவர்கள் "வேதிக் கக்ஷி" யைப்பற்றிப் பேசினர். ஆனந்தப்பூரில் மேற்படிகக்ஷியின் கிளையொன்று ஸ்தாபிக்கப்பட்டது. சாரதாசட்டம், ஆலயப் பிரவேசச் சட்டம் முதலியவைகளை ரத்து செய்யவேண்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மதுரை பழனி கோவில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்த வேண்டுமென்றும் ஸர்க்காரைக் கேட்டுக்கொள்ளப்பட்டது. யுத்தத்தில் நமது சக்ரவர்த்திக்கு ஜயம் ஏற்படவேண்டுமென்றும் பிரார்த்தனை செய்யப்பட்டது. (க.நி.)

சாஸ்திர விதிப்படி ஓர் விவாஹம்

புது அக்கிரஹாரம்

திருவாதிக்கடுத்த புது அக்கிரஹாரத்தில் பிரம்மஸ்ரீ வெங்கடராம சாஸ்திரிகள் வைகாசி மீ 10வயன்று புத்ரிக்கு விவாஹம் நடத்தினர். வது கிரஹத்தில் விவாகம் மட்டும்செய்துகொண்டு மற்ற பிரவிச்ய ஹோமாதி கார்யங்கள் யாவும் கணபதி அக்கிரஹாரத்தில் வரன் கிரஹத்தில் நடத்தி 4-வது நாள் சேஷ ஹோமமும் வரன் கிரஹத்திலேயே செய்யபட்டது.

இந்தமாதிரி சாஸ்திரீய முறையான விவாஹம் வெகு அபூர்வமாய் அநுஷ்டிக்கப்பட்டதையாவரும்கவனித்து அதன்படி செய்ய ஆரம்பிக்கவேணும், ஓ. நி.

திப்பிராஜபுரம்.

பிரும்ம வித்யா ஸபா.

17—5—40 ஏகாதசி தினம் ஸ்ரீ லக்ஷ்மீகாந்த சர்மா அவர்களால் ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள ஸ்ரீ பகவான் உத்தவருக்கு உபதேசித்தருளிய "உத்தவ கீதை" யின் ஒரு பாகமாகிய 24 குருக்களிடமிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டியது பற்றி தெளிவாகச்சொன்னார்.

22—5—40 புதன்கிழமை தினம் அனுஷ நக்ஷத்திரமானபடியால், தற்காலம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தை அலங்கரித்து வரும் நமது ஸ்ரீ பரமாசாரியாளுடைய ஜயந்தி தினம் கொண்டாடப்பட்டது. கிரமப்படி ஸ்ரீ ஆசார்யாள் படத்திற்கு பூஜை அர்ச்சனை, நைவேத்யம் முதலானதுகள் நடந்தபிறகு இரவு 8-30க்குமேல் ப்ரும்மஸ்ரீ K. N. தேவராஜ பாகவதர் அவர்களால் தகுந்த பக்க ஜமாக்களுடன் "யயாதி" சரித்திரத்தின் முதல் பாகமாகிய "ஸஞ்ஜீவினி" ஆக்யானம் என்னும் ஸத்கதா காலக்ஷேபம் வெகு விமரிசையாகவும், உத்ஸாகத்துடனும் நடத்தப்பட்டது. முடிவில் ஸ்ரீ ஆசார்யாளின் மஹிமை பற்றி சிலாகித்தும், நமது பெரியவாளுடைய ஜயந்திதினத்தை கொண்டாடவேண்டிய ஆவச்யகத்தைப்பற்றியும் சொற்பொழிவு நிகழ்ந்து இனிது முடிந்தது.

25—5—40 சனிக்கிழமை தினம் ஒரு யதீச்வரரால் பகவத்யானம், கதாபூர்வகமாக சொல்லப்பட்டது. (க. நி.)

அரியக்குடி

ஸ்ரீவைஷ்ணவ யுவர்களின் கூட்டம்

17-5-40வ இக்கூட்டம் அரியக்குடியில் ஸந்நதிக்கு எதிரிலுள்ள மைதானத்தில் ஸ்ரீ ஜீ. ரெங்கராமானுஜம் B. A. (Hons) தலைமையில் நடந்தது. அவ்வமயம் ஒற்றுமையின் அவசியத்தைப்பற்றி ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாஸன் பீ. ஏ, எஸ். ரெங்காச்சாரி பீ.எஸ்.இ. ஸௌமியநாராயணன், ஆர். பார்த்தஸாரதி, எஸ் ராமசாமி, முதலியோர் பேசினர்கள். பேசியவர்கள் உலகவாழ்க்கைக்கு ஒற்றுமை எவ்வளவு அத்யாவசியமென்றும், மிருகபலத்தால் யாதொரு பலனும் ஏற்படாதென்றும் பெரியகாரியங்களை சாதிக்க அரசியல் துறையிலும், தொழில் அபிவிருத்திமுறையிலும், ஏனையநிர்வாக ஸ்தாபனங்களிலும் ஒற்றுமையும், ஒன்றுபட்ட மனப்பான்மையும் முக்கியமென்றும், ஸ்ரீவைஷ்ணவன் எந்த சுபாவத்தினனாக இருக்கவேண்டுமென்றும், விரிவாகப்பேசி ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கிடையேதற்சமயமிருக்கும் கட்சி பேதங்கள் மறைந்து அவர்கள் ஒன்றுபடவேண்டுமென்றும் தெளிவாக எடுத்துரைத்தார்கள்.

தலைவரின் முடிவுரைக்குப்பின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பிறகு கோவிலைசுற்றி பஜனை ஊர்வலத்தோடு கூட்டம் இனிது முடிந்தது.

ஓ. நி.

கும்பகோணம்

விக்கிரமஞு வைகாசிமீ 19வ (1-6-40) தேதி கும்பகோணம் மேட்டுத்தெரு அக்காரம் ஸ்ரீ செங்கழனீர் விநாயகர் ஆலயத்தில் ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யாள் ஆக்ஞை பிரகாரம் ஏகாதசியை முன்னிட்டு மாலை 4 மணிக்கு மிலட்டூர் பிரம்மஸ்ரீ கே. ரெகுநாத சாஸ்திரிகளால் கஜேந்திர மோக்ஷம் என்னும் சரித்திரம் உபன்யாசம் நடைபெற்றது. திரளாக மகாஜனங்கள் கதாச்ரவணம் செய்தார்கள்.

டி. ஜெ. கிருஷ்ணமூர்த்தி

ஸனாதனத்தலைவர்களின் கடமை.

தற்காலம் நமது தேசத்தில் ஸனாதன ஹிந்துக்களின் நிலை மிகவும் கேவல ஸ்திதியில் இருக்கிறதென்பதை ஒவ்வொரு ஸனாதனிகளும் நன்குணர்ந்திருக்கிறார்கள். சாஸ்திர விஸ்வாசம் மத விஸ்வாசம் அதிகமாயும் இருக்கிறது. ஆனால் கொஞ்சமும் தியாகம் என்பதே கிடையாது. பயமும் இவர்களை விட்டபாடில்லை. நம்மை இதர ஜாதி ஹிந்துக்களும் நம்பவில்லை. அதின் காரணத்தை மட்டும் விசாரிப்பதுமில்லை. நம்முடைய ஜாதி மதத்தை வேருடன் கொல்லும் சாரதா சட்டத்தை நாம் கண்டிப்பாய் மத பக்தியுடன் மீறியிருந்தால் இன்று இத்தேசத்தில் ஆலயப்பிரவேசம் முதலான அக்கிரமச் சட்டங்கள் வந்தேயிருக்காது. சீர்திருத்தக்காரர்கள் நம்மை வெறும் கூச்சல்போடும் கூட்டத்தார்கள் என்றே எண்ணி விட்டார்கள். அதுபோலவே நாமும் சமயங்களில் செய்யும் அவசிய காரியங்களில் தைரியக் குறைவுடன் நடந்து வந்திருக்கிறோம்.

ஆலயப்பிரவேச சட்டம் சாரதா சட்டம் போலபிராமணசமூகத்திற்கு தீங்குவிளைத்து விடாது. ஆனால் ஆலயப்பிரவேசத்தால் ஆகம சாஸ்திர முறை மாறி ஈஸ்வர சான்னித்யம் குறைந்தால் இந்த தேசத்தை ஆண்டுவரும் மன்னருக்கு தீங்குண்டாகும். யுத்தங்கள் ஏற்படும். ஜனங்கள் கஷ்டப்படுவார்கள். காலா காலத்தில் மழை பெய்யாது. தான்யங்கள் விருத்தியாகாது. பஞ்சம் தோன்றும். அநேக வியாதிகள் உண்டாகும். உள்நாட்டுக் குழப்பம் ஏற்படும். என்று சாஸ்திரங்கள் முறையிடுவதை நாம் எப்போதும் ராஜ விசுவாசிகள் என்ற முறையில் நம்மை ஆளும் சக்ரவர்த்திக்கும் பார்லிமெண்டுக்கும் ராஜப்ரதிநிதிக்கும் கவர்னர் முதலானவர்களுக்கும் எடுத்துச் சொல்லவேண்டியது நமது கடமையாகும். அத்துடன்கூட நம்முடைய சகோதரர்கள் ஆன ஆலய வழிபாட்டில் நம்பிக்கையுள்ள அவர்களுடைய மூதாதையர்களின் திருப்பணி கைங்கர்யம் முதலியனவற்றில் ஈடுபட்ட ஜாதி ஹிந்து சகோதரர்களும் சீர்திருத்த வெறியர்களான குருடர்களின் வழியை பின்பற்றினால் மீளாத படுகுழியில் அவர்களுடன் உங்களையும் சேர்த்துக்கொள்வார்கள்.

ஆகையால் எந்த ஆகம சாஸ்திரமானது நம்முடையமுன்னோர்களை ஆலயநிர்மாணம் செய்து கடவுளை வணங்கும் முறை சொல்லி நம் முன்னோர்களை பின்பற்றி இதுவரை நமது புண்ய தேசமான பாரத தேசம் கௌரவத்தை அடைந்ததோ அதை அநியாயமாய் அழித்துக்கொள்ள வேண்டாமென்று அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் அதேபோல் நம்முடைய தாழ்ந்த வகுப்பில் பிறந்தவர்களுக்கும் உங்களுடைய மூதாதைகளும் ஒரு கடவுளைவணங்கிஹிந்து மதத்திலே வாழ்ந்து வந்ததை நீங்களும் சமீபகாலம் வரை சேவித்து உங்களுடைய பக்தியைச் செலுத்தி ஈசுவர பிரசாதம்குறைவன்னியில் அடைந்து நீங்களும் மேன்மையுடன்வாழ்ந்து வந்திருப்பது நன்றாய் தெரிந்த விஷயம். இப்பொழுது உங்களை ஜாதி ஹிந்துக்களுடன் விரோதம் உண்டுபண்ணி உங்களுக்கு சமத்வம் கொடுக்கிறோமென்று பேசுவதைக் கண்டு ஏமாறவேண்டாம். நீங்கள் ஜாதி ஹிந்துக்களுடன் ஆலயம் செல்வதால் சமத்வம் சகோதரத்வம் வருமானால் இதுகாலம்வரை ஆலயம் சென்றுவந்த ஜாதியார்கள் சகோதரர்களாய் வாழ்கிறார்களா? சமத்வந்தான் அவர்களுக்கு கிடைத்திருக்கிறதா? ஆகையால் உங்கள் சொந்த அறிவை உபயோகப்படுத்தி ஆராய்ந்து நடந்துகொள்வதுதான் விசேஷம்.

சனாதனத் தலைவர்கள் சாஸ்திர உபதேசத்துடன் நிற்காமல் ஸ்த்ரீகளின் வயதை நிர்த்தாரணம் செய்து கர்ப்பாஷ்டாமத்தில் உபநயனஸ்தானத்தில் விவாகம் செய்யவேண்டுமென்று பேசினால் போதாது. பிள்ளைகளைப் பெற்ற சனாதனிகளும் சனாதனப்பற்றுடன் கூடியவர்களானால் காலத்தில் செய்யக்கூடிய விவாக சம்ஸ்காரத்தை ஒழுங்காய் நடத்த தைரியம், ஆஸ்திக புத்தி, சாஸ்திர விசுவாசத்துடன் கூடிய முறையில், பெண்களையும் பாலியத்திலேயே கிரஹிக்கவேண்டுமென்ற விசுவாசம் பரஸ்பரம் ஏற்பட்டால் எத்தனை அக்கிரமச் சட்டங்களும் வெகு காலம் நீடிக்காது. சீர்திருத்த கோட்டான்களும் வெளியிலே வரக்கூடாத நிலைமை ஏற்படும். இவ்வளவுக்கும் காரணம் நமது சனாதனத் தலைவர்கள் சரியான வழி காட்டாததால் தான். நாம் இந்த ஸ்திதியில் இருக்கிறோம் என்பதை மறைத்துப் பேசுவதில் பிரயோஜனமில்லை. இந்த லீவு நாளில் நமது சனாதனத் தலைவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து சனாதனப் பிரசாரம் செய்வது என்ற சங்கலப்பத்துடன் புறப்பட்டால் சனாதன ஆரியர்கள் முன்பாகசீர்திருத்த மின்மினிப் பூச்சிகள் இருக்குமிடம் தெரியாமல் மறைவது நிச்சயம்.

பிராமணர்களுக்கு எச்சரிக்கை:—என்ற மெயில் பேப்பர் போஸ்டரைப் பார்த்து ஜனங்கள் பயந்து போனார்கள். சத்யமூர்த்தி அவர்கள் சந்தியாவந்தனம்' காயத்ரிஜபம் முதலானதும் செய்வதுடன் விபூதி தரிக்கிறோம். குடுமி வைத்திருக்கிறோம், என்றும் சம்சாரத்துடன்ம துரைவந்து ஓர் மாதம் குடியிருந்தாவது பிராமண சமூகத்தை மீனாக்ஷி அம்மன் கோவிலில் தெரிசனம்செய்து வைப்பதாயும் பிரதிக்ஞை செய்துவிட்டார். இந்த மூர்த்தி நாயனாரவர்கள் தம்முடைய இந்த அழகிய வாசகத்தாலே "வேதசாஸ்திர பாரங்கதராகிய பிராமணோத்தமர்கள் பல்லாயிரவர் விசாலஹ்ருதயராகி என்னையும் என்னை உள்ளிட்ட ஹரிஜன கோஷ்டியாரையும் ஸ்ரீமீனாக்ஷி தேவாலயத்திற்கு பெருமகிழ்ச்சியுடன் அழைத்துச்சென்று சுவாமி தரிசனம் செய்துவைத்து மாலை பரிவட்டாதி சிறப்புகள் செய்வித்த வைபவத்தை என்னென்று சொல்வேன்' என்றுபத்திரிகையில்(ஹிண்டு) ஒரு விசேஷ அறிக்கை வெளியிட்ட நந்தனார்க்கழகத் தலைவரான அந்த சுவாமி சகஜானந்தருடைய வார்த்தைகளை நிஜக்கலப்பில்லாத சுத்தமான பொய்யென்று அழுத்தம் திருத்தமாக அசைக்கத் திருப்ப முடியாத வகையில் வெளியிட்டதற்காக பிராமண சமூகத்தாராகிய நாம் பெரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை வற்புறுத்தாமல் இருக்கமுடியவில்லை.

இனிமேலாகிலும் சனாதன தலைவர்களும் சனாதன ஆர்வம் கொண்ட பணமில்லாத வாக்மிகளைக்கொண்டு தகுந்த பிரசாரம் செய்தால் சனாதனிகளுடைய ஆபீஷ்டம் நிறைவேறுவதில் யாதொரு தடையுமில்லை.

ஜீ. ஏ. வி. சாஸ்திரி,
மதுரை.

புதுக்கோட்டை.

ஸ்ரீ தெக்ஷிணாமூர்த்தி வஸந்தோத்ஸவம்.

புதுக்கோட்டை டவுன் வடக்கு ராஜவீதியிலிருக்கும் மடம் கிருஷ்ணய்யர் குமாரரும் வைதிக ஸபை அஸிஸ்டெண்ட் செக்ரிடரியும் திவான்பேஷ்கார் அவர்கள் ஆபீஸ் கிளர்க்குமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகளால் தன் கிருஹத்தில் தன் முன்னோர்கள் ப்ரதி வைசாகத்திலும் நடத்திவருகிற வஸந்தோத்ஸவத்தினுடைய 60வது வருஷத்திய உத்ஸவம், 12—5—40 வைசாக சுத்த பஞ்சமி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு சென்ற 11நாளாக மிகவும் விமரிசையாக நடைபெற்றது. ஒவ்வொரு காலையிலும் மாயவரம் ப்ரம்ம-ஸ்ரீ பஞ்சாபிகேச சாஸ்திரிகள் ஸர்வவேத ஸாரமான ப்ரம்ம கீதாபாராயணமும் ப்ரவசனமும் செய்தார்கள். ராத்ரிகாலங்களில் பாகவத ஸம்பிரதாயானுஸாரமாக பஜனை காலக்ஷேபங்கள் நடந்தன. பௌர்ணமியன்று கீதாஸமாப்தியானதும் ஸ்ரீ சாஸ்திரிகளுக்கு மரியாதைகள் வழங்கப்பட்டன. அப்பால் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்வாமி, ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதசார்யாள் முதலான மூர்த்திகளுக்கு விசேஷ பூஜை ஸஹஸ்ரநாமார்ச்சனைகள் லோகக்ஷேமார்த்தமும், புதுக்கோட்டை ஸமஸ்தான க்ஷேமார்த்தமும் நடைபெற்றன. அப்பால் பிராம்மண போஜனங்களும் ஏழைகளுக்கு அன்னதானமும் நடந்தன.

22—5—40 ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியையும் ஆதி சங்கரபகவத் பாதாசார்யாள் படத்தையும் இரண்டு கேடகங்களில் அமைத்து அலங்கரித்து நான்கு ராஜவீதிகளிலும் ஸ்ரீ ஸ்ரீ ஹஜூரிலிருந்து வழக்கம்போல் அனுப்பலான யானை குதிரை வகையரு பெரிய மேளம் முதலிய பிருதுகளுடன் ஊர்வலம் சிறப்பாக நடந்தது. ந.நி.

காசியாத்திரையா-காசுயாத்திரையா?

இங்கிலாந்தில் ஒரு மாணவன் சர்வகலாசாலையில் கடைசிப்பரீட்சையில் தேறிவிட்டபோதிலும்கூட, அவனுடைய கல்விபூரணம் பெற்றுவிடாது. அவன் ஐரோப்பாவில் சுற்றுப்பிரயாணம் செய்தாகவேண்டும் அதன் பிறகுதான், அவன் உத்தியோகத்திற்கும் கிருஹஸ்தாச்ரமத்திற்கும் லாயக்காகக் கருதப்படுவான்.

நமது பாரதவர்ஷத்திலும் கொள்கை அவ்விதமேதான் இருந்து வருகிறது. ஸரியான கொள்கையை நாம் அனுசரிப்பது மாத்திரம் கிடையாது. விவாஹத்திற்கு முன்பு ஒரு பிரமசாரி காசியாத்திரை போகவேண்டும் என்பது பேச்சில் இருந்து வருகிறது. காசியாத்திரை போய்வருவதென்றால், பாரதமாதாவை அவன் பிரதட்சிணம் செய்துவர வேண்டும். இந்தியாவின் நாகரீகங்களையும் க்ஷேத்ரங்களையும் தீர்த்தங்களையும், நதிகளையும், நன்கறிந்து கொள்கிறான். இந்திய சரித்திரத்தின் வாஸனைகளெல்லாம் இவனுடைய உள்ளத்தில் புகுந்து கொள்கின்றன. இவன் பாரதபுத்திரனாகி விடுகிறான். உத்தமமான பாரதபுத்திரர்களைப் பெறவும் லாயக்காகிறான். இதுதான் காசியாத்திரையின் தத்துவம், மஹத்துவம்.

நடவடிக்கையில் அது அற்றுப்போய் விட்டது. அது விபரீதமாக மாறிவிட்டது. அது வெறும் காசுயாத்திரையாக வரதட்சிணையாத்திரையாக மாறிட்டது. முற்றிலும் அலங்கோலம்! குடும்ப வாழ்க்கையே முழு மோசமாகி விட்டது. சீர்களுக்காக சாகும் வரையில் சீறிவிழும் தன்மையே ஓங்கி நிற்கிறது.

இதேமாதிரி தான்— பிராஹ்மணா: பஹுஜனப்ரியா: என்றஅம்ருதவசனத்தை கோமாளித்தனமாக— மாற்றி— உலகத்தில் அவமரியாதை இயக்கங்கள் அதிகமாகிவிட்டன.

ந. நி.

நித்திரையும் ஆரோக்யமும்

(ஏ. எஸ். தேசிகன் கோடம் பாக்கம்.)

மனிதன் ஆரோக்யமாக இருப்பதற்கு மூன்றுவிதமான விஷயங்களில் அதிக நியமங்களை அனுஷ்டிக்க வேண்டும்.

आहारशयन ब्रह्मचर्यैःयुक्त्या प्रयोजितैः ॥ शरीरं धार्यते नित्यमागारमिव धारणैः ॥

(ஆஹாரசயன ப்ரஹ்மசர்யைர்யுக்த்யா ப்ரயோஜிதை: ll சரீரம் தார்யதே நித்யமாகாரமிவ தாரணை: ll) என்று சொல்லப்பட்டிருக்கிறது. எப்படி வீட்டை தாங்கி நிற்பதற்கு தூண்கள் அவச்யமானதோ அதுபோல் சரீரத்தை காப்பாற்றுவதற்கு ஆஹாரம், நித்திரை, ப்ரஹ்மசர்யம் இம்மூன்றையும் தகுந்த அளவில் ப்ரயோகிப்பதேயாம். இங்கு அந்த மூன்றுக்குள் ஒன்ருன நித்திரை என்பதை சிறிது விவரித்துக்கூறுவோம்

சரீரத்தையும் இந்திரியங்களையும் ஆனந்தத்தில் அமர்த்துவது அல்லது துன்பத்தில் ஆழ்த்துவதும் அவற்றை பலப்படுத்துவதும் அல்லது இளைப்புறச்செய்வதும், யௌவன நிலைமை அல்லது கிழத்தனம ஏற்படுவதும், உணர்ச்சியோடு இருத்தல் அல்லது உணர்ச்சியிழத்தலும், உயிருடன் வாழ்தல் அல்லது உயிர் துறத்தலும், மற்றும் தேஹ தர்மம் அனைத்துமே கடவுளின் அருமையான அருள் நித்திரைக்கு அதீனமாய் இருக்கின்றன. ஒரு மனிதன் தொடர்ச்சியாக பகலெல்லாம் உழைத்து வந்தால், பிறகு அவனுடைய உடலும் மனமும் சேர்ந்து ஞானேந்திரியங்கள் வெளிவிஷயங்களில் ப்ரவ்ருத்தி பெருமல் அமைதியுற முயலும்போது நித்திரை என்னும் அவஸ்தை உண்டாகிறது. நன்ருக உறங்கி எழுந்தால் மீண்டும் தேஹத்திலும் மனதிலும் உத்ஸாஹம் மேலிட்டு, புலன்களும் அதன் அதன் வேலையில் சுறுசுறுப்பு கொள்வது இயல்பு. நித்திரைக்கு காரணபூதமான குணம் தமஸ். ஸத்வம் என்ற தத்வமானது விழிப்பிற்கு காரணமாகின்றது என்று “निद्राहेतुस्तमः, सत्वं बोधने हेतुरुच्यते (நித்ராஹேதுஸ்தம:,ஸத்வம், போதனே ஹேதுருச்யதே) சுருங்கசுச்ருதர் சொல்லி இருக்கிருர்.

தேஹத்தின் மூன்று தோஷங்களுக்குள் ஒன்ருன கபமானது தன் இயற்கையளவினும் மிக்க அதிகரித்துவிடுமானல், தேஹதாரணை, மனோதாரணை இவற்றிற்கு அவசியமான சக்தி ஒருவாறு தற்காலம் நிலைகுலையத் தொடங்கும். ஆகையால், நித்திரையென்னும் அவஸ்தை ஸம்பவிக்கின்றது. இரவு கபம் பிரகோபம் அடையக்கூடிய காலமாகையால் அது நித்திரைக்கும் இயற்கையிலேயே ஏற்ற காலமாக ஏற்பட்டிருக்கிறது. பகல் வேளையில் எப்பொழுதுமே உறங்குவது பிசகு, ஆனல் கோடைகாலம் என்னும் க்ரீஷ்மருதுவில் பகல் நித்திரை விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குக்காரணம் வாக்படரால் சொல்லப்பட்டிருக்கிறது. ग्रीष्मे वायुचयादान रौक्ष्यरात्र्यल्पभावतः ॥ दिवास्वप्नोहितः............”
(க்ரீஷ்மே வாயுசயாதான ரௌக்ஷ்ய ராத்ரயல்ப பாவத: திவாஸ்வப்னேஹித:........”) என்று. அதாவது, க்ரீஷ்ம காலத்தில் அதிக உஷ்ணமாக இருப்பதாலும் ரூக்ஷத்தன்மை அதிகரிப்பதினுலும், ராத்ரி காலம் ஸ்வல்பமாக இருப்பதினுலும் பகல் நித்திரை செய்வது உசிதமே. ஆனல் அடிக்கடி பிரஸங்கம் செய்வது, வாஹனமேறி சவாரி செய்வது, வழிநடப்பது, மதுபானம் செய்வது, புணர்ச்சி, சுமையைச் சுமப்பது, மற்றும் வெவ்வேறு வேலைகளைச்செய்வது, கோபித்தல், மனம் வருந்துதல், பயம், வாட்டமுற்று சிரமப்படுதல், ஆகியவற்ருல்வருந்துபவரும் ச்வாஸரோகமென்ன, விக்கலென்ன, அதிஸாரமென்ன இவற்ருல் கஷ்டப்படுதல், கிழவர்கள், பாலர், துர்பலர்கள், மிகமெலிவடைந்தவர்கள், உரக்ஷதம், நாவரட்சி, வயிற்றுவலி இவற்ருல் பீடிக்கப்படுபவர்களும், அஜீர்ண ரோகிகளும் ஏதேனும் காரணத்தினுல் அடியுண்டு கஷ்டபடுபவரும், பித்து பிடித்தவர்களும், பகலில் பழக்கமாக நித்திரை செய்பவரும் இராக்காலந் தவிர பகற்பொழுதிலும் தூங்குவது உசிதமே. கொழுப்பு அதிகரித்த தேகமுடையவர்களும், கபப்பிரகோபமுடைய வர்களும், எண்ணை தேய்த்துக்கொண்டவரும், பகலில் தூங்கக்கூடாது. விஷ ஸம்பந்தத்தினுல் வருந்துபவனும், தொண்டையில் வியாதி உடையவனும் எப்பொழுதும் இராக்காலங்களில் கூட தூங்கக்கூடாது. தகாத காலத்தில் தூங்குவதால் மயக்கம், ஜ்வரம், தலைவலி இருதயத்துடிப்பு அக்னி மாந்தியம் முதலியவைகள் ஸம்பவிக்கும். நித்திரை இல்லாவிட்டால் சரீரத்தில் வேதனை, தலையில் பாரமான உணர்ச்சி, கொட்டாவி விடுதல், உடம்பு சோர்வடைதல், தலை சுற்றல், அஜீர்ணம், சோம்பல் இவை உண்டாகும்.

இனி நித்திரைக்கான நியமங்கள்யாவை என்பதை கவனிப்போம். வைத்திய சாஸ்திரத்திற்கு வைதிக ஸம்பிரதாயம் வெகுவாய் வேறுபட்டதல்ல. வைத்தியக்கிரந்களிற் கூறிய தினசர்யா முறைகளையும், வைதிகக்கிரந்தங்களிற் கூறிஉள்ள ஆஹ்நிக முறைகளையும் ஆருய்ந்து கவனித்தால், முடிவில் தேஹாத்ம சுத்திவிஷயங்களில் இரண்டிற்கும் முரண்பாடு அரிதென்றே அறியவரும். நமது ஆஹ்நிக ஸம்பிரதாயப்படியும், ஆயுர்வேத முறைப்படியும் சயனத்தில் படுத்துறங்க வேண்டிய காலம் இரவுதான் ஆஹ்நிகத்தில் தினக்ருத்யங்களில் கடைசியான அநுஷ்டானம் “யோகம்,, என்பது. சயனித்து நித்திரை செய்வதை ‘‘யோகம் என்று ஸம்பிரதாயப்படி வழங்குகிருேம். அது போலவே வைத்திய ஸம்ஹிதாக்கிரந்தம் இயற்றிய ஹாரீதர்

«मासार्धे च भ्रुवोर्मध्येस्थायिते चान्तरात्मनि ॥
तेनचेतोभवेल्लीनं निद्राणेषु नृष्ठुसवयम्’ ॥

மாஸார்தேச ப்ருவோர்மத்யேஸ்தியதே சாந்தராத்மனி। தேனசேதோ பவேல்லீனம் நித்ராணேஷு ந்ருஷு ஸ்வயம் என்று நித்திரா நிலைமையை உண்மையோகமாகவே கூறிஇருக்கிருர். மனதை இவ்வாறு கவலையற்றுத் தியானத்தில் இருக்கச்செய்து கொண்டு உயரமானப்ரதேசங்களில் ஸௌகர்யமான சயனத்தில் கை கால் முதலிய ஸகல அங்கங்களையும் சுத்தமாகச் செய்து கொண்டு படுத்து அமைதியாகத் தூங்குவது ஆரோக்கியத்திற்கு அவசியமானமுறை என்று வைத்திய சாஸ்திரம் கூறுவது போலவே வைதிக ஆஹ்நிகக் கிரந்தங்களும் பெரும் பாலும் அவ்விதமே நித்திரைக்கான நியமங்களை விதித்திருக்கின்றன.

இந்திரியவர்கவிச்ராந்தி நிமித்த தயாகைங் கர்யத்வேன அனுஸந்தாய, யோகம் கரிஷ்ய இதி ஸங்கல்ப்ய, கட்கா பர்யங்காதீனுமுபரி சாஸ்திரியே சயனே சுத்த சுஷ்கபாத: பகவந்தம் த்யாயன ஸுகேன சயீத) என்பது ஸ்ரீ கோபால தேசிகாது ஆஹ்நிக வாக்கியம். படுத்துறங்கும் போது பாதங்கள் கூட மிகச் சுத்தமாயிருக்க வேண்டு மென்பதையும் ஆனல் நித்திரைக்குப் போகையில் அவை ஈரமாய் இருந்தால் ஆரோக்யக்குறைவுக்கு ஆஸ்பதமாகுமென்பதைக் கருதி ஈரமறத் துடைத்துக் கொண்டு படுக்க வேண்டியது அவசியம் என்பதையும், “संशुद्ध शुष्कपाद (ஸம் சுத்த சுஷ்கபாத:) என்பதால் வைதிகோத்தமர் வற்புறுத்திக் கூறி இருப்பது வைத்திய சாஸ்திரஜ்ஞர்களாலும் பாராட்டக்கூடிய விஷயமாம். அகாலத்திலும் அதிக நீண்ட நேரம் நித்திரையுளக்கூடாது. அவசியமான வேளைகளில் போதியவளவு தூங்காமலிருப்பதும் தகாது, ஆரோக்கிய சுகத்தைச் சீருடன் காக்கவும், ஆயுள் அபிவிருத்திக்கு அனுகூலம் செய்யவும், அகால நித்திரைக்கு வசப்படாமல் இருப்பதும், கால நித்திரையிற் கருத்து செலுத்துவதும் வைதிக வைத்தியதர்மங்களில் ஈடுபட்டவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட நன்னெறியாம். (அகாலே திப்ரஸங்காச்ச நசநித்ரா நிஷேவிதா। ஸுகாயுஷீ பராகுர்யாத் காலராத்ரிரிவாபரா: தஸ்மாந்நஜாக்ருயாத்ராத்ரௌ திவாஸ்வப்னம் சவர்ஜயேத் ஜ்ஞாத்வா தோஷகராவேதௌ புத: ஸ்வப்னம் மிதம் சரேத்”)

சாஸ்திரத்தில் விதித்துள்ள குறைகளைச்சற்றும் தவருது நித்ரா விஷயத்தில் கவனம் செலுத்துபவர் நோயற்றவராய், மனம் தெளிந்தவ ராய், பழுதடையாமல் புலன்களைப் பெற்றவராய் பலத்திலும் நிறத்திலும் நிகரற்றவராய் நூருண்டளவும் நீடுழிவாழ்வர் என்று ஸுச்ருதர் வெகுஅழகாய் வர்ணித்திருக்கிருர் மேலும் கவலையற்று நிர்விருத்தி அடைந்திருத்தலும் மனதுக்கினிய விஷயங்களில்ஈடுபடுவதும் ப்ரஹ்மசர்யவ்ரதமும்சிற்றின்பத்திற் பற்றற்றிருப்பதும், மனக்களிப்பால் மகிழ்ந்திருத்தலும், இவையாவையும் ஏற்ற காலத்தில் மனிதனை நித்திராஸுகம் அனுபவிக்கச்செய்வற்கு உள்ள முகாந்தரங்களாம்என்று ஆசார்யவாக்படர்”(மனோனுகூலா: விஷயா: நிவ்ருத்தி: க்ருதக்ருத்யதா। ப்ருஹ்மசார்யாதிக்ராம்ய ஸுகநிஸ்ப்ருஹ சித்ததா: நித்ராதஸ்யஹித்ருப்தஸ்ய ஸ்வம் காலம் நாதிவர்ததே”) என்பதால் கூறி இருக்கிருர்.

மனத்துயரத்தினுலோ, ஆபாஸம் முதலிய வேறுவித காரணங்ககளாலோ நித்திரை உண்டாகாமல் போனல், அவனுக்கு அடியில் வரும் சிகித்ஸை செய்ய வேண்டும் ஏதேனும் தைலங்களைத் தலையிலும் தேஹத்திலும் தடவித்தேய்க்கலாம். குதிரையின் மேல் ஏறிச்சவாரி செய்யலாம். சர்க்கரை பால் தேன், முதலிய பதார்த்தங்களைக் கொண்டு பக்குவம் செய்த மதுரமான உணவுகளை உண்ணலாம். நிர்மலமாயிருக்கும் இலேசான உடைகளை உடுத்துக் கொண்டு மிகவும் மிருதுவான படுக்கையில் படுத்துக்கொள்வது நலம் அசைவற்றுத் தூங்குவது தேஹாரோக்கியத்திற்கும் மாசற்றமதியுடன் தனக்கும் மற்றவருக்கும் உபயோகமான வகையில் உலகில் நீடித்து உயிர் வாழ்வதற்கும் இன்றியமையாத முறையாம். சரீரஸுகத்திற்கு வியாயாமம் என்னும் தேஹப்பயிற்சி இன்றியமையாச் சாதனமென்று நிச்சயித்திருக்கிருர்கள். வியாமம் உடல் வன்மையுற எவ்வளவு முக்கியமோ அவ்வளவு ஆயாஸந்தீர அமர்ந்து அமைதியாயிருப்பதும் முக்கியமாகும்.

வியாயாமத்தினுலோ வேறு வேலை செய்வதாலோ களைத்திருக்கும்போது அக்களை தீரஉட்கார்ந்து அல்லது படுத்து பரிச்ரமத்துக்குப் பரிஹாரம் செய்து கொள்வது விச்ராந்தியாகும். இவ்விதம் உறங்காமலே ஓரிடத்தில் அமைதியாகக் களைதிருவது“அங்க்ராவிச்ராந்தி”எனப்படும் படுத்துறங்கி பரிச்ரமத்திற்கு விசேஷபரி

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும்
கைகண்ட இந்திய மருந்து
இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.

(7 ம் பக்கம் தொடர்ச்சி)

ஹாரம் செய்து கொள்வது "ஸநித்ராவிச்ராந்தி" எனப்படுகிறது. இவ்விருவிதவிச்சிராந்திகளில் ஒன்று வியாயாமத்தைப்போலவே விசேஷாரோக்கியத்தை வளிவிக்கும் ஸாதன மென்பதைச் சாஸ்திரங்களும் அநுபவமும் அறிவிக்கின்றன. நியமம் தவருது இளைப்பாறியும் நித்திரை செய்தும் வந்தால் மனிதர் 200 வருஷங்கள்கூட ஜீவித்திருக்கலாம் நீக்ரோ ஜாதியினர் நீண்டகாலம் ஜீவித்திருப்பதற்கு அவர்கள் உடல் தெரியாமல் நாள்தோறும் நீண்டநேரம் நன்கு நித்திரையுறுவதே முக்கியகாரணமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது எவ்வப்பொழுது தேஹம் களைத்து விடுகிறதோ எவ்வப்பொழுது கண் கலக்கமுற்றுச் சோர்வடைகிறதோ அவ்வப்பொழுதெல்லாம் நன்ருகப் படுத்துறங்குவது அவசியமென்பது இயற்கை விதியாம். நியமம் தவருது நித்திரைசெய்வதாலாகும் ஆரோக்யமகிமையைப்பற்றியும் மதியும் களங்கமற்று மேன்மையுறுவதைப் பற்றியும் அநாதியான ஆயுர்வேத சாஸ்திரம் போற்றுவதைப்பல நுல்களிற் படிக்கலாம் காலம் தவருது நித்திரை செய்வதை நிராகரிக்காமல் நியமனத்துடன் இருந்து வந்தால் தாதுக்களின் வைஷம்யம் நீங்கி அவற்றிற்குச்சம நிலைமையுண்டாகும். சோம்பல் விலக்கிச் சுருசுருப்பு ஏற்படும். தேஹம் செழித்து ஒழுக்காகப் புஷ்டியடையும் சரீரத்தின் நிறம் சிறப்புற்று மேனியின் காந்திமேம்பாட்டையும். உடல் வன்மையுறும். உள்ளம் தெளிந்து உத்ஸாஹ முண்டாம். பசிதீபனமெடுத்துப் புசிக்கும்உணவு எளிதில் ஜீர்ணமாகும் என்கிற இவ்வுண்மைகளை அடியில்வரும் ச்லோகம் மிகச் சுருங்கக் கூறுகிறது:—

நித்ராசஸேவிதா காலே தாதுஸாம்யமதந்த்ரிதாம். புஷ்டிவர்ணபலோத்ஸாஹானக்நிதீப்திம்கரோதிஹி

உ

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ மடம் சிஷ்யகோடிகளுக்குக் கொடுத்த

ஆக்ஞா ஸ்ரீமுகம் பிரகாரம்:

திருவாரூர்

ஸ்ரீ தியாகராஜப்பெருமானுக்கும்
ஸ்ரீவல்மிகநாதர் முதல் பஞ்சமூர்த்திகளுக்கும்

136 குடம் கங்காதீர்த்தம் பிரயாகையிலிருந்து தருவித்து மஹாஅபிஷேகத்தை நாளது விக்ரமஹு ஆனிமீ 22உ (5—7—40) முதல் ஆனிமீ 32உதேதி (15—7—40) ஸோமவாரம் முடிய, 136 வைதிகர்களைகொண்டு ஸ்ரீமஹா ருத்ர பாராயணம் செய்வித்து தக்ஷிணாயனபுண்யகாலம் ஸமயம் அபிஷேகம் செய்விப்பதென்றும் இந்த 12 நாளிலும் அன்னதானம் செய்வதென்றும் தீர்மானித்திருப்பதாலும், இந்த கைங்கர்யமானது மஹாஜனங்களின் க்ஷேமத்தையும் துர்பிக்ஷம் நீங்கவும், ராஜாங்க க்ஷேமத்தையும் உத்தேசித்து நடத்தப்படுகிறது. இந்தவிதமான கைங்கர்யம் இதற்கு முன் ஒருபோதும் நடந்ததாகக்காணப்படவில்லை. ஒருசமயம் இராஜாக்களால் நடத்திவைக்கப்பட்டிருக்கலாமோ தெரியவில்லை இதற்கு ஏராளமான பொருள் தேவை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே தர்மம் என்பது கேட்டும், கேளாமல்தாளுகவே செய்ய முன்வருவதே சுத்தமான தர்மமென்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஜெகத்தில் தர்மிஷ்டர்கள் ஏராளம் ஒவ்வொருவரையும் அணுகி நேரில் போய் தெரிவித்து கேட்பதென்பது சிரமமான கார்யம் ஆகையால் கேளாமல் செய்வதே உத்தமம் மென்பதை அனுஸரித்து தங்களால் இயன்றதை பணமாகவோ அன்னதானத்துக்குரியஸாமக்கிரியைகளாகவோ அடியில்கண்ட விலாசத்துக்கு நேரிலோ மனுஷியாள் மணிஆர்டர் மூலமாகவோ அனுப்பியும் கூட இருந்து இந்த தர்மதை நடத்திவைத்து கிருதார்த்தர்களாகவும் இசுவர அனுக்றஹத்தை அடையவேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது

விலாஸம்

பழனிசிவன்,
9நெ. ஸன்னதித்தெரு திருவாரூர். S.I.R.

அக்னிஷ்டோம யாகம்

கிருஷ்ணபுரம்

ஆய்குடி ஸ்ரீசக்தி தீக்ஷிதரால்

வெகு விமர்சையாக அக்னிஷ்டோமம் நடந்தது. இதற்குகும்பகோணம் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகள் அனுக்ரஹ பூர்வகம் ரூ 30—0—0ம் ஒரு ஸால்வையும் யஜமானருக்கு போலகம் ஸ்ரீராமா சாஸ்திரிகள் மூலம் அனுப்பியதுடன் தர்மப்பிரசாரமும் ஷை சாஸ்திரிகள் மூலம் அனுக்ரஹித்தார்கள். ஷை யக்ஞத்திற்கு திருநெல்வேலி அட்வகேட் ஆர். கிருஷ்ணஸாமி அய்யர் தேவகோட்டை ஸம்ஸ்கிருத பண்டிதர் Ky ராமசர்மா திருவனந்தபுரம் மீமாம்ஸாத்யாபகர் ஆய்குடி சங்கரநாராயண தீக்ஷிதர் தண்டாங்கோரை வாஜபேயயாஜி அப்பாத்துரை தீக்ஷிதர் அத்தாழநல்லூர் வாஜபேயயாஜி யக்ஞவரதராம தீக்ஷிதர் இவர்கள் விஜயம் செய்து தர்ம விஷயமாக உபன்யாஸம் செய்தார்கள். ஷை யக்ஞத்திற்கு கல்லிடைகுறிச்சி சக்தி தீக்ஷிதர் ப ர ஆ ர் யக்ஞராம தீக்ஷிதர் கிருஷ்ணராஜபுரம் யக்ஞஸ்வாமி தீக்ஷிதர் சிவஸ்வாமி தீக்ஷிதர், சாட்டுபத்து தக்ஷிணாமூர்த்தி தீக்ஷிதர் சாஸ்தர தீக்ஷிதர் வரஹக்குளம் குளத்துதீக்ஷிதர் பிளாஞ்சேரி ஹரிஹர தீக்ஷிதர் கல்லிடைகுறிச்சி சங்கர தீக்ஷிதர், சுந்திரபாண்டியபுரம் பிச்சு தீக்ஷிதர், ஷையார்புத்திரர் கிருஷ்ண திக்ஷிதர் இன்னும் பல வித்வான்களும் பேரியோர்களும் வந்து அனுக்ரஹித்தார்கள். ஷை யக்ஞத்திற்கு தேவகோட்டை பிராமணமஹாஜனங்களும் மதுரை பட்டணம் முதலான ஊர்களிலிருந்து திரவியம் உதவி செய்து உள்ளூர் மஹாஜனங்களின் உதவி மிகவும் போற்றத்தகுந்தது. விசேஷமாக யக்ஞஸம்ரக்ஷக டி. எல். சுப்பய்யர் ஆஹிதாக்நிகளுக்கும் வித்வான்களுக்கும் விசேஷமாக ஸம்மானம் செய்தது குறிப்பிடத்தகுந்தது.

கே. ஓய். ஆர். சர்மா

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachiarar and S. Kalyanasundaram.